**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.** 4

Name : திரு. சைலின் ஜெப சுபின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.02.2026

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது வடசேரி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் தலைமைக்காவராக பணியாற்றிய போது 06.01.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களுடன் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. டேவிட்ராஜ், த.கா.திரு. பிரபுதாஸ், ஆகியவர்கள் குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு வாகன சோதனை செய்து கொண்டிருந்தோம். அப்போது TN 75 C 6564 என்ற சிவப்பு கலர் பல்சர் வாகனத்தில் 1வது எதிரி வந்து கொண்டிருந்தார். அவரை நிறுத்திசோதனை செய்த போது இருசக்கர வாகனத்தின் பின்பகுதியில் 2 சாக்கு பைகளில் கணேஷ் புகையிலை 120 பாக்கெட்டுகள் காணப்பட்டது. கடைகளில் வைத்து விற்பனைக்கு

கொண்டு செல்வதாக கூறினார். மேலும் எதிரியிடம் பணம் ரூ.2,97,550/- இருந்தது. அத்தாட்சியில் பணத்தையும், புகையிலையும் கைப்பற்றி 08.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்தோம். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ நாளில் சம்பவ இடத்தில் மட்டும் தான் சோதனை செய்தோம். காவல்துணை கண்காணிப்பாளர் உத்தரவு படி ரோந்து செய்தோம். சம்பவ நாளில் எங்களுக்கு ரகசிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. காலை 06.00 மணியிலிருந்து வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். மற்ற வாகனங்களுக்கு அபராதம் எதுவும் விதிக்கவில்லை. எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் ஆவணங்களை நான் பார்வையிடவில்லை. எந்தெந்த கடைகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறோம் என்று எங்களிடம் கூறவில்லை. சம்பவரோடு வீடுகளும், கடைகளும் உள்ள பகுதி தான். ஆட்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும். தனி நபர் சாட்சிகளிடம் நாங்கள் கையொப்பம் பெறவில்லை. சாக்கு பையின் அளவு எனக்குத் தெரியாது. சாக்கு பையை நாங்கள் எடை போட்டு பார்க்கவில்லை. 1வது எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை, கடைக்கும் செல்லவில்லை. சிறுவர்களுக்கோ, பள்ளி அருகிலோ விற்பனை செய்ததாக என்னிடம் கூறவில்லை. எனது தனிப்பட்ட இருசக்கர வாகனத்தில் ரோந்திற்கு போனோம். நான் சொன்னது போல் எதிரி எவ்வித பொருளும் எடுத்து வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் 2வது எதிரி இல்லை. 2வது எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றபடவில்லை. 2வது எதிரிக்கு, 1வது எதிரி

புகையிலை கொடுத்தார் என்று சாட்சிகள் யாரும் கூறவில்லை. சம்பவ இடத்தில் நடந்த விபரங்களை தான் நான் ஆய்வாளரிடம் சொன்னேன். இவ்வழக்கிற்கும், 2வது எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.** 5

Name : மரிய ராஜகுமார்

S/o, D/o, W/o : மரியதாஸ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **18.02.2026**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் குட்டக்காட்டில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். 2வது எதிரியை தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

2வது எதியிடமிருந்து கணேஷ் புகையிலையை வாங்கி உபயோகம் செய்ததில் எனக்கு உடல்உபாதைகள் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.6**

Name : சதீஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 18.02.2026

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் ஆற்றூரில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

06.01.2023ம் தேதி 10.30 மணிக்கு திருவட்டார் காவல்நிலைய ஆய்வாளர் ரமேஷ்மணி என்பவரைகைது செய்து விசாரிக்க அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில்பதிவு செய்யப்பட்டது என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W.7**

Name : ஏசுதாஸ்

S/o, D/o, W/o : முத்துசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 18.02.2026

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் ஆற்றூரில் வசித்து வருகிறேன். ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

06.01.2023ம் தேதி 10.30 மணிக்கு திருவட்டார் காவல்நிலைய ஆய்வாளர் ரமேஷ்மணி என்பவரைகைது செய்து விசாரிக்க அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில்பதிவு செய்யப்பட்டது என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.